# பாரதியின் பாடல்களில் வாழ்வியல் நெறிகள்

*மு. கீர்த்தனா*
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி
தமிழாய்வு மையம், தூத்துக்குடி

*முனைவர் ர. செல்வலதா*
நெறியாளர் & உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7891

***ஆய்வுச்சுருக்கம்***

*தற்கால இலக்கியம் என்பது இன்றைய எழுத்துலகில் தோன்றிய புதிய வடிவங்களாகும். இதனுள் கட்டுரை, கவிதை, புதினம், நாடகங்கள் போன்றவை அடங்கும். இலக்கியம் எனப்படுவது காலத்தை பிரதிபலித்து காட்டும் கண்ணாடி போன்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய பாரதி ஒரு சிறந்த கவிஞர். அவருடைய பாடல்களின் கருத்துக்களால் மக்கள் உத்வேகம் தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளை பாரதியின் பாடல்கள் வழி ஆராய்வதை இவ்வாய்வு நோக்கமாக கொண்டுள்ளது.*

**பாரதியின் மொழியாற்றல்**

மொழியறிவும் வெளிப்பாட்டுத்திறனும் ஒரு மனிதனின் வெற்றிக்குக் காரணமானவை இதில்தான் கருத்து வெளிப்பாட்டுத் திறன் மேன்மையடைகிறது. உமை ஒரு பாதி சிவன் ஒரு பாதி என்பது சிவக்கோட்பாடு அதுபோல மனிதனின் உடல்பாதி எனில் மற்றொரு பாதி அவனது கருத்து வெளிப்பாட்டுத்திறன் தனக்குள் இருக்கும் திறமையை சரியான சொற்களால் சரியான மொழியால் வெளிப்படுத்த இயன்றவனே வாழ்க்கையில் வெல்வான். இக்கருத்தை பாரதி உணர்ந்திருந்தார். அவரது மொழிப்புலமையும் சொல் ஆளுமையும் அறிவுசார் வெளிப்பாட்டுத் திறனும் கவிநயமும் அவரை கைகளாலும் உள்ளத்தாலும் வணங்க வைத்திருக்கின்றது.

**“பேசாப் பொருளையும் பேசநான் துணிந்தேன்**
**கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்’**[1]

என்று கூறும் பாரதியின் வரிகள் அவர்தம் இதயத்தில் இருந்த புதுமைக் கருத்துக்களை சுவைப்பட சொல்ல வேண்டும் என்ற அவரது வேட்கையினை வெளிப்படுத்துவதாக இருக்கின்றன.

**“உள்ளத்தில் ஒளி உண்டாயின்**
**வாக்கினிலே ஒளி உண்டாகும்”**[2]

என்று அவர் திடமாக நம்பினார். அந்த நம்பிக்கையே அவரது மொழி ஆற்றலாக உருவெடுத்தது.

அவர் உள்ளத்தில் பல்வேறு புதுமைக் கருத்துக்கள் நிரம்பிக் கிடந்தன. தாய்மொழிப் பற்று, தேசப்பற்று, விடுதலை வேட்கை, தெய்வ பக்தி, ஆத்மத் தேடல் போன்ற பல கருத்துக்களின் அவர் புதுமையான பார்வையைப் பெற்றிருந்தார்.

**"வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து**
**வாண்புகழ் கொண்ட தமிழ்நாடு'[3]**

என்று பாடும் பாரதி வள்ளுவனின் பேராற்றல் மொழித்திறனாலும் கவிதைத் திறனாலும் கருத்துத் திறனாலும் உயர்ந்து விளங்குவதால் தமிழருக்குப் பெருமை ஏற்பட்டது என்று கூறுகிறார். மொழித் திறனும் கவித்துவத்தோடு கருத்துக்களை வெளியிடும் திறனும் பெரும் புகழைக் கொண்டு வந்து சேர்க்கும் என்று உறுதி சொல்கிறார். அதனால் தான் தன்னை ஓர் கவிதைச் சித்தனாக காட்சிப்படுத்துகிறார்.

**"எனக்கு முன்னே சித்தர் மலர் இருந்தாரம்மா**
**யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில் "[4]**

என்பதே இதற்கான சான்று என்று கூறுகிறார்.

பாரதியின் பாடல்களில் வெளிப்பாட்டுத் திறன் பாரதிக்கு தனது கவிதைகள் தமிழ்ச் சமுதாயத்தை வெல்லும் என்ற நம்பிக்கை மிகப் பெரும் அளவில் இருந்தது. இன்றைய இளைஞர்கள் இதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். வெளிப்பாட்டுத் திறன் எந்த அளவிற்கு ஒரு மனிதனின் வெற்றிக்குத் துணை நிற்கின்றன என்று இன்றைய இளைஞர்கள் உணர்தல் நலம்

**"நேர்ப்படப் பேசு**
**நூலினைப் பகுத்துணர்**
**நீதி நூல் பயில்**
**சூரரைப் போற்று**
**கல்வியதை விடேல்**
**சொல்வது தெரிந்து சொல்**
**தூற்றுதல் ஒழி**
**புதியன விரும்பு**
**வெடிப்புறப் பேசு'[5]**

இதையெல்லாம் வெளிப்பாட்டுத் திறனுக்கு பாரதி உணர்த்திய முக்கிய வழிகளாகும்

**உத்வேகமூட்டும் இலக்கியச்சுவை**

**"தேடிச் சோறு நிதந் தின்று -**
**சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்**
**வாடித் துன்ப மிக உழன்று - பிறர்**
**வாடப் பலசெயல்கள் செய்து - நரை**
**கூடிக் கிழப்பருவமெய்தி -கொடுங்**
**கூற்றுக்கிரையெனப் பின் மாயும் - பல**
**வேடிக்கை மனிதரைப் போலே - நான்**
**வீழ்வேனென்று நினைத்தாயோ?[6]**

சோதனைகள் எத்தனை வேண்டுமானாலும் வரட்டும் அவற்றை வென்று வாகை சூடுவேன் என்ற தன்னம்பிக்கையை இந்தக் கவிதை இன்றைய இளைஞர்கள் நெஞ்சில் உத்வேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றது

**"வெள்ளத்தின் பெருக்கைப் போல்**
**கலைப்பெருக்கும்**
**கவிப்பெருக்கும் மேவுமாயின்**
**பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்**
**விழிபெற்றுப் பதவி கொள்வார்'[7]**

என்று மகாகவி கூறுவது இன்றைய இளைஞர்கள் கலைத்திறன் பெற்றால் உயர்பதவிகளை அடையலாம் என்ற கருத்தை எடுத்துரைப்பதாக அமைகிறது.

**சொல்லாற்றல்**

**"கேட்டார் பிணிக்கும் தகையவாய்**
**கேளாரும் வேட்பமொழிவதாம் சொல் "[8]**

உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் கட்டுண்டு போக வேண்டும் அதைக் கேளாதவர் அந்தச் சொற்பொழிவை கேட்காமல் போனதை நினைத்து வருந்தும் அளவில் அந்தப் பேச்சு இருத்தல் நலம், வாழ்வில் தன்னுடைய சொற்களை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு இதுவே தகுந்த உதாரணமாகும்.

**மகிழ்ச்சியின் மகத்துவம்**

**"சிந்து நதியின் மிசை நிலவினிலே**
**சேர நன்னாடிளம் பெண்களுடனே**
**சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து**
**தோணிகளோட்டி விளையாடி வருவோம்"[9]**

என்று பாடும்பாட்டில் தேச ஒருமைப்பாட்டுணர்வு தெரிகிறது என்பதைக் காட்டிலும் அந்தக் காட்சியின்பம் அளிக்கும் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

**பாரதி கூறும் காதலின்பம்**

***"நீலக் கடலினிலே நின்றன்***
***நிண்ட குழல் தோன்றுதடி !***
***கோல மதியினிலே - நின்றன்***
***குளிர்ந்த முகம் காணுதடி !***
***ஞால வெளியினிலே - நின்றன்***
***ஞானவொளி வீசுதடி' ![10]***

என்ற பாடலில் காதலின்பமும் எல்லையற்ற மகிழ்ச்சி இன்பமும் ஒன்று சேர்ந்து பாய்வதைக் காணமுடிகிறது.

**தனித்துவப் புலவன்**

பாரதிக்கு இருந்த தன்னிம்பிக்கை அளவிடற்கரியது. வறுமைச்சூழல், நிரந்தர வேலையின்மை போன்ற சூறாவளிகள் சுழன்றடித்தாலும் தேக்கு மரம் போல் தேய்வுறாது நிற்கும் வல்லமை அவரது தன்னம்பிக்கையால் விளைந்த அதிசயம்.

***"புவியனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்துத்***
***தமிழ்மொழியைப் புகழிலேற்றும்***
***கவியரசர் தமிழ்நாட்டுக்கில்லை எனும்***
***வசை என்னாற் கழிந்ததன்றே"[11]***

இவ்வாறு கூறும் நெஞ்சுரம், தன்னம்பிக்கை, உறுதி மனப்பாங்கு அவரிடம் இருந்தது. தமிழ் மொழியைப் புகழில் ஏற்றும் கவியரசர் ஒருவரும் இப்போது தமிழ்நாட்டில் இல்லையே என்னும் வசை என்னால் கழிந்தது என்று கூறும் மனத்திண்மை நம்மை வியக்க வைக்கிறது.காலத்தின் மதிப்பு

***"காலம் எனும் உலகக் கருவியை பாரதி பெரிதும் மதித்தார்.***

***"சுவை புதிது பொருள் புதிது, வளம் புதிது***
***சொல் புதிது சோதிமிக்க நவ கவிதை***
***எந்நாளும் அழியாத மா கவிதை'***
***"புகழ் ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்"[13]***

என்று கூறும் மகாகவி தன் வாழ்க்கைக்குப் பிறகும் என்று கூறும் மகாகவி தன் வாழ்க்கைக்குப் பிறகும் தன்புகழ் நின்று நிலைப்பெறும் என்று நம்பினார். நாளைய உலகம் என் கவிதைகளை தலைமேல் வைத்துக் கொண்டாடும் என்ற திடமான நம்பிக்கை அவருக்கிருந்தது. காலத்தை வென்று வாழும் கவியாக தனது பெயர் நிலைபெறும் என்று பாரதியின் மனம் நினைத்தது.

***"காலம் என்பது***
***கறங்குபோல் சுழன்று***
***கீழது மேலாய்***
***மேலது கீழாய்***
***மாற்றிடும் தோற்றம்"[14]***

என்பர்மனோன்மணியம்சுந்தரனார்.காலம் நமக்குச் சாதகமாக மனிதர்களை அழைத்து வரும் காலத்தின் கட்டளைக்கு ஏற்ப மனிதர்கள் உதவுவார்கள். செயல்படுவார்கள்.

**உழைப்பின் உன்னதம்**

உழைக்கும் எண்ணம் என்பது இயல்பாக வரவேண்டிய ஒன்றாகும் ஏற்பட்டு விடுகிறது. பெற்றோரைப் பார்த்து ஆசிரியரைப் பார்த்து உற்றார், உறவினரைப் பார்த்து நண்பர்களைப் பார்த்து மனிதனுக்குள் ஏற்படும் தாக்கம் அவனைச் சிறந்த உழைப்பாளியாக மாற்ற வல்லது.

***"ஐயமும் திகைப்பும் தொலைந்தன ஆங்கே***
***அச்சமும் தொலைத்தது, சினமும்***
***பொய்யும் என்றினைய புன்மைகளெல்லாம்***
***போயின, உறுதி நான் கண்டேன்"[15]***

என்று வாழ வேண்டும் அச்சமில்லாமல் ஐயமில்லாமல் சினமில்லாமல் பொய்யில்லாமல் வாழும் வாழ்வே சிறப்புடைத்தாயிருக்கும் என்பது உண்மை.

***"உலகம் ஓர் உண்டியல்***
***உழைப்பைச் செலவு செய்தவன்***
***வெற்றிகளைச் சேமிக்கின்றான்"[16]***

உழைப்பின் இலாபமாக வெற்றி சாத்தியம் என கவிஞர் கவியரசன் கூறுகிறார்.

**பாரதி காட்டும் வெற்றிப்பாதை**

வெற்றி நமது வாழ்க்கையின் ஆதாரம் நமக்கு ஓர் அடையாளம் அர்த்தம் தருகிறது. அனைவரையும் உயர வைக்கிறது. எனவே வெற்றி பெற்ற மக்களே சமுதாயத்தின் கண்கள்.

இந்த வெற்றியின் பெருமையை நன்கு உணர்ந்தவர் பாரதி. அவரது வெற்றியை எழுத்துக்களால் உலகம் கண்டது. அவருடைய பாடல்களில் வெற்றியின் சிரசு நாதம் கேட்கிறது.

**"எடுத்த காரியம் யாவினும் வெற்றி**
**எங்கு நோக்கினும் வெற்றி, மற்றாங்கே'**[17]

என்ற மிகுந்த தன்னம்பிக்கையுடன் பாரதி கூறுகிறார்.

**"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது**
**எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கிறது**
**எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்"**[18]

என்பது கீதை கூறும் ஆறுதல் மொழி. இந்த மனப்பாங்கு வந்துவிட்டால் நமக்கு உலகம் மகிழ்ச்சியானதாக விளங்கும். வாழ்க்கை வெற்றிகரமாக இருக்கும். வெற்றி பெற விரும்பும் இளைய தலைமுறையினர் மனநிலையைச் சமநிலையாகப் பேணுதல் அவசியம். மனநிலையைப் பேணுதல் என்பது நம்மை நாமே மகிழ்ச்சியாக வைத்திருக்கும் தந்திரம் ஆகும்.

**"வெற்றி எட்டுத் திக்கும் என்று கொட்டு முரசே**
**வேதம் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே**
**நெற்றி ஒற்றைக் கண்ணோடு நிர்த்தனம் செய்தான்**
**நித்த சக்தி வாழ்கவென்று கொட்டு முரசே'**[19]

என்று வீரப் பேருரை நிகழ்த்துவார் பாரதி. அவருக்கு வெற்றி அடைவதில் இருந்த வேட்கையும் உறுதித் தன்மையும் தனிச் சிறப்பு பெற்றது. வெற்றி பெறுவோம் கவிதையால் சாதிப்போம் என்ற நம்பிக்கையோடு அதை நிலைநாட்டியவர் பாரதி.

**"வெற்றிக்கான அடையாள அட்டை**
**தோல்வி என்ற அச்சு இயந்திரத்தில்**
**அச்சிடப்படுவது தான்'**[20]

என்று கவிஞர் கவிதாசன் "பாரதி முதல் கவிதாசன் வரை' என்னும் நூலில் குறிப்பிடுகிறார். எனவே, வாழ்வில் பாரதியும் பல சோதனைகளைத் தாண்டியே வெற்றி உணர்வுடன் தன்னுடைய பாடல்களின் வழி இன்றும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார் எனும் கருத்து இதன் மூலம் உணரப்படுகின்றது.

**கல்வியே பெருஞ்செல்வம்**

**"வேதங்கள் பாடுவள் காணீர் – உண்மை**
**வேல்கயிற் பற்றிக் குதிபோள்**
**தேரும் சாத்திரம் கோடி உணர்ந்து**
**ஓதி உலகெங்கும் விதைப்பாள்"**[21]

என்று கல்வியறிவும் ஞானமும் தரும் சக்தி அன்னையின் புகழைப் பாரதி பாடுகிறார்.

கல்வி கற்றவன் நீண்ட பெரும் அறிஞர் சபையிலும் நிமிர்ந்து நடக்கிறான். அவனது தோள்களில் வெற்றி மாலைகள் விழுகின்றன. பாராட்டுக்கள் குவிகின்றன. கற்பனைக்கும் எட்டாத பதவி உயர்வுகள் தொடர்ந்து வருகின்றன.

**"செல்வங்கள் கேட்டால் நீ கொடுக்க வேண்டும்**
**சிறுமைகள் என்னிடம் இருந்தால் விடுக்க வேண்டும்**
**கல்வியிலே மதியினை நீ தொடுக்க வேண்டும்**
**கருணையினால் ஐயங்கள் கெடுக்க வேண்டும்"**[22]

என்று சக்கியம்மையிடம் வேண்டும் பாரதி கல்வியின் பெருமையை உரக்கப் பேசுகிறார்.

**"கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக்'**[23]

என்று கல்வியில் கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தையும் வழிமுறைகளையும் வள்ளுவர் கூறுகிறார்.

**முடிவுரை**

**"உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்"**[24]

என்று போற்றுகின்றார் திருவள்ளுவர் மனதில் நினைத்ததை மறதியின்றி இடைவிடாமல் ஒருவன் நினைக்கக் கூடும் எனில் அவ்வாறு நினைத்ததை அடைதல் எளிதாயிருக்கும்

என்பது திருக்குறள் சிந்தனை, அந்த வகையில் உறுதியும் தன்னம்பிக்கையும் பாரதியினுடைய வாழ்வில் ஆதாரம் அதனை இன்றைய இளைஞர்களுக்கும் இந்த சமூகத்திற்கும் எடுத்துச் செல்வதற்கும் அந்த வகையில் உறுதியும் தன்னம்பிக்கையும் பாரதியினுடைய வாழ்வில் ஆராதமாகின. அதனை இன்றைய இளைஞர்கள் இந்த சமூகத்திற்கும் எடுத்துச் செல்வதற்கும் பயனடைவதற்கும் பாரதியின் பாடல்கள் நெறிப்படுத்துகின்றன. பாரதியின் பாடல்களை படித்து உணர்ந்தவர்கள் மிகச் சிறந்த ஆளுமைகளாகத் திகழ்கிறார்கள் என்பதை இவ்வாய்வின் வழி அறிய முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. ச.உஷாராணி (உ.ஆ) - பாரதியார் கவிதைகள் மூலம் தெளிவுரையும் (பக் 221)
2. கவிஞர் ஜெ கமலநாதன் - பாரதி பாடல்களில் தன்னம்பிக்கை (பக் 53)
3. சு.உஷாராணி (உ.ஆ) - பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும் (பக் 101)
4. கவிஞர் ஜெ.கமலநாதன் - பாரதி பாடல்களில் தன்னம்பிக்கை (பக் 54)
5. மேலது - (பக் 57)
6. சு.உஷாராணி (உ.ஆ) பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும் (பக் 64)
7. கவிஞர்.ஜெ.கமலநாதன் - பாரதி பாடல்களில் தன்னம்பிக்கை (பக் 60)
8. மேலது - (பக் 64)
9. சு.உஷாராணி (உ.ஆ) - பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும் (பக் 57)
10. மேலது - (பக் 57)
11. கவிஞர் ஜெ.கமலநாதன் - பாரதி பாடல்களில் தன்னம்பிக்கை (பக் 73)
12. சு.உஷாராணி (உ.ஆ) - பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும் (பக் 247)
13. மேலது - (பக் 324)
14. சாமி நிவேதிதா - திருக்காதலி பக் 95
15. சு.உஷாராணி (உ.ஆ) - பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும் (பக் 290)
16. பு.மு அன்புசிவா-பாரதி முதல் கவிதாசன் வரை ( பக் 142)
17. சு.உஷாராணி (உ.ஆ) - பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும் (பக் 301)
18. பாரதியார் - பகவத் கீதை சு.உஷாராணி (உ.ஆ) - பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும (பக் )
19. பு.மு அன்புசிவா - பாரதி முதல் கவிதாசன் வரை ( பக் 143)
20. சு.உஷாராணி (உ.ஆ) - பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும (பக்)
21. மேலது - (பக் 277)
22. திருவள்ளுவர் - திருக்குறள் (பக் )
23. மேலது - பக் 63